**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8064803

1. District : மாவட்டம் Kanchipuram PS: காவல்நிலையம் V&AC Kanchipuram Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 9/AC/2019/KM, Date: நாள் 30/10/19 at 18.00 hrs

2. (i) Act சட்டம்: The prevention of Corruption Act 1988 as amended 2018 & Cr.P.C. Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended 2018 & 102 Cr.P.C.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 24/10/2019 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 hrs Time to : நேரம் வரை 23.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30/10/2019 Time : நேரம் at 18.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30/10/19 Time : நேரம் at 18.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Regional Transport Office (RTO), Chengalpattu. Above 40 kms. East
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி —
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் Kanchipuram District.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Thangavelu. (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் District Inspection Cell officer (g) Address : முகவரி Kanchipuram & Thiruvallur Districts, Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) (Accused - 1 to 5 - Staffs of RTO office & A-4 to A-8 - Private Persons) A1 - Tr. C. Natarajan, Regional Transport officer, Chengalpattu RTO office, A-2 Tr. K. Selvaraj MVI - Grade-2, A-3 Tr. S. Saravanan, MVI Grade-1 (Enforcement), A-4 Tr. P. Jeda Ram, Arunai Rajasthani, A-5 Tr. S. Vetrivel S/o Selvamani, Kallidi Chithamur village, A 6 Tr. S. Selvakumar, Ravi Driving school, Big Natham, Chengalpattu, A 7 Tr. S. Manarasu, Naicherrel & A-8 Tr. V. Kulirakat S/o Virayagan, Desumugipet

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— by the Complainant —

GCP-240-34(Type-2) 90,000 Cps -2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Seized Rs. 88,380/- as un-accounted bribe amount.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) Submitted, Today on 30/10/2019, while I was on duty in my office I received an endorsement order of the District Deputy Superintendent of Police, Vigilance & Anti-Corruption, Kanchipuram Unit consequent to the tapal containing the complaint and the proceedings of the Joint surprise check conducted at Chengalpattu RTO office on 24/10/19, headed by the District Cell Officer Tr. G. Thangavel, Kanchipuram & Thiruvallur District, Office at Kanchipuram. The complaint and the proceedings details are as follows.

[illegible]

[FIR Contents continues to the next page]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G.S. Tamizharasi Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS VSAC, Kpm on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 30.10.19. [signature] 30/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

G.S. TAMIZHARASI,

15. Date & Time of despatch to the court: 31/10/19 at 09.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் INSPECTOR OF POLICE,
Rank: நிலை …………… No. எண் ……………
VSAC, KANCHIPURAM.

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

24.10.2019 அன்று மாலை 17.00 மணி முதல் இரவு சுமார் 23.30 மணி வரை திடீர் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி கூட்டாய்வின் போது கணக்கில் வராத, செங்கற்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலக அதிகாரி மற்றும் ஊழியர்களுக்கு இலஞ்சமாக கொடுக்க வந்த மற்றும் கண்டெடுக்கப்பட்ட பணம் ரூ.88,380/- (ரூபாய் எண்பத்து எட்டாயிரத்து முந்நூற்று எண்பது மட்டும்) இலஞ்சப்பணம் என முடிவு செய்து சம்மந்தப்பட்ட அதிகாரி, அலுவலர்கள் மற்றும் தனி நபர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இக்கடிதத்துடன் கைப்பற்றப்பட்ட தொகை மற்றும் இதர ஆவணங்களையும் தங்களிடம் ஒப்படைக்கிறேன் என்பதைக் கணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள ஒம்/-----எஸ்.தங்கவேலு, 29.102.2019, முாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம். இணைப்பு - (1) கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத இலஞ்சப்பணம் ரூ.88,380/- (ரூபாய் எட்டாயிரத்து முந்நூற்று எண்பது மட்டும்), (2) 24.10.2010 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆவணம், (3) பணம் கைப்பற்றப்பட்ட நபர்களின் வாக்குமூலங்கள்-4, (4) இராஜா டிரைவிங் பள்ளியின் வேலையாள் மூலம் கைப்பற்றப்பட்ட 52 ஓட்டுநர் உரிமங்கள் மற்றும் (5) செயல்முறை ஆணையின் மூலம் கைப்பற்றப்பட்ட சான்றொப்பம் இட்ட ஆவணங்கள். **காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். முன்னிலை:- திரு.S.தங்கவேல், நாள்:- 24.10.2019.** பொருள் :- திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - செங்கற்பட்டு - வட்டார போக்குவரத்து அலுவலகம் - 24.10.2019 திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான -செயல்முறைகள். காஞ்சிபுரம் ஃ திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் (இருப்பு) மற்றும் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர்களின் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு முதல் சென்னை செல்லும் சாலையில் பரனூரில் இடது புறம் அமைந்துள்ள செங்கற்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், வாகனம் சம்மந்தமான வேலைகளை முடிக்க வரும் பொது மக்களிடமிருந்தும், டிரைவிங் ஸ்கூல் நடத்துபவர்களிடமிருந்தும், அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் பணம் லஞ்சமாக வசூலிப்பதாக கிடைத்த ரகசிய தகவலை தொடர்ந்து, இன்று 24.10.2019-ந்தேதி மாலை சுமார் 17.00 மணியளவில், மேற்குறிப்பிட்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், மேற்க்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின்

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

நடவடிக்கைகள் குறித்த விவரம் வருமாறு. செங்கற்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்களை பதிவு செய்வதற்கும், ஓட்டுநர் உரிமம் வழங்க, புதுப்பிக்க, வாகனங்களுக்கு பேன்சி எண்கள் வழங்க, வாகன தர பரிசோதனை சான்று வழங்க, ஆர்.சி புத்தகங்கள் வழங்க மக்களிடம் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்டையில், இன்று 24.10.2019 ஆம்தேதி இவ்வலுவலகத்தில் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கான, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு..S.தங்கவேல், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் திரு.T.சிவபாதசேகரன் மற்றும் குழுவினர்கள் இணைந்து திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

துறைத் தலைமை அலுவலர். போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம், எழிலகம், சென்னை-05,

வட்டார போக்குவரத்து அலுவலகம் செங்கற்பட்டு ஆய்வின்போது கலந்து கொண்டவர்கள்.

1. திரு..S.தங்கவேல்,
   மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
   காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்
   (இருப்பு), காஞ்சிபுரம்.

2. திரு.T.சிவபாதசேகரன்
   காவல் துணை கண்காணிப்பாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
   காஞ்சிபுரம்.

3. திருமதி.G.S.தமிழரசி,
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்.

4. திரு.G.அண்ணாதுரை
   காவல் ஆய்வாளர்,
   ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம்.

5. திரு. திரு.C.நடராஜன், ஆ/வ-54, த/பெ. M.செல்லப்பா
   வட்டார போக்குவரத்து அலுவலர்,
   வட்டார போக்குவரத்து அலுவலகம்,
   செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், செங்கற்பட்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில், இன்று 24.10.2019-ம் தேதி மாலை சுமார் 17.00 மணி முதல் இரவு சுமார் 23.30 மணி வரை மேற்கொள்ளப்பட்ட இரு துறை திடீர் கூட்டாய்வின்போது அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.C.நடராஜன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.S.சரவணன், நிலை-1 (செயலாக்கம்), திரு.K.செல்வராஜ் நிலை-1, உதவியாளர் திரு.N.பிரேம்குமார், இளநிலை உதவியளார்கள் திரு.K,ராமன், திரு.N. தங்கராஜ், பதிவறை எழுத்தர், திரு.S.ஜெகநாதன், வட்டார போக்குவரத்து அலுவலரின் ஓட்டுநர் திரு.E.சாலமன் மற்றும் அலுவலக உதவியாளர்கள், திரு.R.சீனுவாசன், திருமதி.M.மனோன்மணி ஆகியோர்களும், தனிநபர்களான திரு.மணியரசு, த/பெ. பாலகிருஉஷ்ணன், நாயக்கன்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டம், ரூத்தரகோட்டி த/பெ. விநாயகம், தேசிங்குபேட்டை, திருக்கழுக்குன்றம், காஞ்சிபுரம் மாவட்டம், எஸ்.செல்வகுமார், த/பெ. சபாபதி, பெரியநத்தம், வெற்றிவேல், த/பெ. செல்வராஜ், கரிக்கிலி சித்தாமூர், வினீத், த/பெ. சுப்ரமணி, பூங்குணம், லீலாராம் த/பெ. பெருமாள், அனுமந்தபுத்தேரி மற்றும் முருகன் த/பெ. சுந்தரமூர்த்தி, நந்திவரம் ஆகியோர்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்தனர். மேலும் அவர்கள் அனைவரையும் வரவேற்பறைக்கு அழைத்துவந்து ஒரே இடத்தில் அமரவைத்து, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான நான், மேற்படி அலுவலர்களுக்கு என்னையும் மற்றும் ஆய்வுக் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, பின் ஆய்வுக் குழுவில் உள்ள அனைவரும் தங்களது உடமைகளை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.C.நடராஜன் மற்றும் அவரது அலுவலகத்தில் இருந்த அலுவலர்களிடம் சுயசோதனை செய்துகாட்டி, அலுவலக சோதனையை ஆரம்பித்து, அலுவலகம் முழுவதும் சோதனை செய்தோம். இவ்வலுவலகத்தில் கடந்த சுமார் 10 வருடங்களாக தனிநபர்களான திரு.மணியரசு மற்றும் திரு.ருத்திரகோட்டி ஆகியோர்கள் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கூறும் வேலைகளை செய்துவருவதாக தெரிவித்தனர். ஆனால் திரு.செல்வராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுடன் வாகன தணிக்கை மற்றும் விபத்து பகுதிகளை பார்வையிட செல்லும்போதும் உடன் உதவிக்காகவும் செல்வதாக தெரிவித்தார். தனியார் மென்பொருள் நிறுவனத்தின் (Bonton Software Pvt) மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள Data Entry Operators 1) திரு.V.மோகன்ராஜ், 2) திரு.S.சரண்குமார் ஆகியோர்கள் அலுவலகத்தில் இருந்தனர். அது சமயம், வட்டார போக்குவரத்து அலுவலர்

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

திரு. C.நடராஜன் அவர்கள் வரவேற்பறையில் உள்ள ஒரு மேஜை நாற்காலியில் வாசலை பார்த்தவாறு அமர்ந்திருந்தார். அவர் அமர்ந்திருந்த இடத்திற்கு பின்பக்கம் அவருக்கு தனி அறை உள்ளது. மேற்படி அறையை சோதனை செய்யப்பட்டது. வரவேற்பறைக்கு இடது பக்கம் கணக்காளரின் கேபின் உள்ளது, அதில் கணக்காளர் இல்லை, அதற்கு பக்கத்தில் அ3 உதவியாளர் கேபின் உள்ளது. அதில் திரு.பிரேம்குமார் உதவியாளர் அவர்கள் இருந்தார். அவரது கேபினை சோதனை செய்தபோது எவ்வித பொருட்களையும் கைப்பற்றப்படவில்லை, அவரை சோதனை செய்தபோது அவரது பக்கெட்டில் வைத்திருந்த ரூ. 210/- கைப்பற்றப்பட்டது, அதற்கு பக்கத்தில் அ4 இளநிலை உதவியாளர் கேபின் உள்ளது. அதில் திரு.தங்கராஜ் இளநிலை உதவியாளர் அவர்கள் இருந்தார். அவரது கேபினை சோதனை செய்யப்பட்டது. அவரை சோதனை செய்தபோது அவரது பக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் 920 கைப்பற்றபட்டது. அதற்கு பக்கத்தில் இ3 மற்றும் தபால் பிரிவு கேபின் உள்ளது. அதில் திரு.ஜெகநாதன் தபால் பட்டுவாடா செய்யும் பதிவறை எழுத்தர் அவர்கள் இருந்தார். அவரை சோதனை செய்தபோது அவரது பக்கெட்டில் வைத்திருந்த ரூபாய் 320 கைப்பற்றபட்டது. இ3 உதவியாளர் பற்றி கேட்க அவர் வங்கிக்கு சென்றுயிருப்பதாக தெரிவித்தார்கள். அதற்கு பக்கத்தில் இ1 மற்றும் இ2 கேபின் உள்ளது. அதில் யாரும் இல்லை. விசாரிக்க அவர் தற்செயல் விடுப்பில் உள்ளதாக தெரிவித்தார்கள். வரவேற்பாளர் அறைக்கு முன்பக்கம் உள்ள இடது பக்கத்தில் வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளரான திரு.B.S.கஜபதி என்பவரின் அறை உள்ளது, அதனை சோதனை செய்யப்பட்டது, மேற்படி அலுவலரைப்பற்றி விசாரிக்க அவர் 23.10.19 முதல் 25.10.19 வரை தற்செயல் விடுப்பில் உள்ளதாக தெரிவித்தார்கள். வரவேற்பாளர் அறைக்கு வலது புறம் செயலாக்கப்பிரிவு அறை உள்ளது, அந்த அறையின் பின்பக்கம் அதாவது, மெயின்வாசலுக்கு வலதுபுறம் உள்ள ஜன்னலின் கீழே பண்டலாக சுற்றப்பட்ட பணம் இருந்தது, அதை எடுத்து எண்ணிப் பார்க்க ரூ.11,300/- (500X22, 100X2, 20x4, 10x2) இருந்தது. அந்த பணம் குறித்து அலுவலகத்திலிருந்த வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் மற்ற அலுவலர்களை கேட்டபோது, அவர்கள் யாரும் தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அது கையூட்டாக பெறப்பட்டு, சோதனையில் பிடிபடாமலிருக்க ஜன்னல் வழியாக வெளியில் வீசப்பட்ட பணமாக இருக்கலாம் என கருதி அப்பணத்தை கைப்பற்றப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல் மோட்டார் வாகன ஆய்வாளர் அறை உள்ளது. அந்த அறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராஜ் அமர்ந்திருந்தார், அவரது

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

அறையை சோதனை செய்யப்பட்டது, அவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.370/- இருந்தது. அதனை பணப்பதிவேட்டுடன் ஒப்பிட்டதில் சரியாக இருந்ததால், அதனை திருப்பி அவர்களிடம் கொடுக்கப்பட்டது. மேலும், அவரது அறையில் சோதனை செய்ய, கொடி நாள் வசூல் புத்தகத்தில் ரூ.800/- இருந்தது. அப்பணம் 8 நபர்களிடம் தலா ரூ.100/- வசூல் செய்யப்பட்ட பணமாகும் என குறிப்பிட்டதை விசாரித்து மீண்டும் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவரது அறைக்கு எதிர் திசையில் Bonton Software-ரின் பணியாளர்கள் அறை உள்ளது. அந்த அறையை சோதனை செய்யப்பட்டது. அந்த அறையில் இருந்த Data Entry Operators திரு.V.மோகன்ராஜ், மற்றும் திரு.S.சரண்குமார் ஆகியோர்களை சோதனை செய்ய திரு.V.மோகன்ராஜ் என்பவரிடமிருந்து ரூ.400/-ம், திரு.S.சரண்குமார் என்பவரிடமிருந்து ரூ.200/-ம் இருந்தது. அதுகுறித்து விளக்கம் கேட்க, அவை அவர்களது அன்றாட செலவிற்காக கொண்டுவரப்பட்டது என தெரிவித்ததால், மீண்டும் திருப்பி அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அதற்கு அடுத்தாற்போல் பதிவேடுகள் அறை உள்ளது, அதையும் சோதனை செய்யப்பட்டது, பதிவேடு அறைக்கு எதிரே லைசன்ஸ் சோதனை செய்யும் கேபின் உள்ளது, அதையும் சோதனை செய்யப்பட்டது. மேலும் வரவேற்பறையிலிருந்த செங்கற்பட்டு, வேதாச்சலநகரில், ராணி ட்ரைவிங் பள்ளி நடத்தி வரும் திரு.S.செல்வகுமார், த/பெ. சபாபதி என்பவர் வரவேற்பறையிலிருந்த இரும்பு சேரில் அமர்ந்திருந்தார். அவரை விசாரிக்க, அவர் தான் நடத்தும் ராணி ட்ரைவிங் பள்ளியின் 6 நபர்களுக்கான லைசன்ஸ் தொடர்பாக வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.3070/- பணம் இருந்தது. மேலும் 6 நபர்களான சங்கீதா, அன்பழகன், ஆர்த்தி, மாரிமுத்து, கணேசன் மற்றும் விக்ரம் ஆகியோர்களின் ஓட்டுநர் உரிமங்களை வைத்திருந்தார். அவர் வைத்திருந்த பணம் குறித்து கேட்டபோது செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததோடு, ஆர்.டி.ஓ அலுவலகத்திற்கு வரும்போது, அதிகாரிகள் அதிகப்படியான பணம் கேட்பார்கள். அப்போது அவர்களுக்கு கொடுப்பதற்காக கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார். அதனால், ரூ.70/-ஐ அவரிடம் கொடுத்து மீதிப்பணம் ரூ.3,000/-ஐ லஞ்சப்பணமாக கருதி கைப்பற்றப்பட்டது. மேலும், அவர் வைத்திருந்த லைசென்ஸ்கள் ஆறின் நகல்களை எடுத்துக்கொண்டு, ஒரிஜினலை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு, அருகிலிருந்த திரு.மணியரசு த/பெ. பாலகிருஷ்ணனை சோதனை செய்ய அவரது பாக்கெட்டில் ரூ.1,080/- இருந்தது. அதுகுறித்து விளக்கம்

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

கேட்டதில், அவரது பிள்ளைகளுக்கு தீபாவளி துணி எடுக்க கொண்டுவந்துள்ளதாக தெரிவித்தார். மேலும் அவருக்கு தினக்கூலியாக ரூ.500/- மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்கள் கொடுப்பதாகவும் தெரிவித்தார். எனவே, அவர் வைத்திருந்த பணத்தில் ரூ.80/-ஐ திருப்பி அவரிடம் கொடுத்து, மீதிப்பணம் ரூ.1,000/-ஐ கைப்பற்றப்பட்டது. அவர் மோட்டார் வாகன ஆய்வாளரான திரு.செல்வகுமார் என்பவரை பார்க்க வந்ததாக தெரிவித்தார். மேலும், அடுத்து அமர்ந்திருந்த திரு.லீலாராம், த/பெ.பெருமாள் என்பவரை சோதனை செய்தபோது, அவர் வைத்திருந்த பிரௌன் கலர் ஸ்கூல் பேகினை சோதனை செய்ததில், அதில் 3 பணக்கட்டுகள் ரப்பர்பேன்டுகள் போட்டு தனித்தனியாக இருந்தது, அதில் ஒரு கட்டினை எண்ணிப்பார்க்க, அதில் 500x50 ரூ.25,000/-மும், 2வது பண்டலில் 2000x4,500x30,200x14,100x10,50x14, 20x4 மற்றும் 10x8 மொத்தம் ரூ.27,660/-மும் மற்றும் 3 வது பண்டலில் 500x23,200x14,100x20 மொத்தம் ரூ.16,300/-மும், என ஆக மொத்தம் ரூ.68,960/- இருந்தது. அப்பணம் குறித்து விசாரிக்க, அவை வாடிக்கையாளர்களிடமிருந்து, அவர்கள் செலுத்த வேண்டிய டியூ பணம் வசூல் செய்யப்பட்டவை என தெரிவித்தார். அதன் ரசீது குறித்து கேட்டபோது, ரசீதுகள் இல்லை என தெரிவித்ததால், மேலும் தொடர்ந்து அவரிடம் விசாரித்தபோது, அவரது வேலைகளை இங்கு முடிக்க வந்தால், அதிகாரிகளுக்கு அலுவலக செலவிற்காக பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்பார்கள். அதனை கொடுத்தால்தான் உடனே வேலையை முடித்து தருவார்கள். அப்படித்தான் இன்று எனக்கு 34+30 என 64 ஆர்.சி ஸ்மார்ட் கார்டுகளை வாங்கினேன் என்று தெரிவித்து அதனையும் பெற்று எண்ணிப்பார்த்து சரிபார்க்கப்பட்டது. அதனால் நான் இந்த அலுவலகத்திற்கு வரும்போது, பணம் கொண்டுவருவேன். அவர்கள் கேட்கும் அதிகப்படியான தொகையை கொடுத்துவிட்டு என் வேலைகளை முடித்துவிட்டு சென்றுவிடுவேன் என தெரிவித்ததால், அப்பணத்தை வட்டார போக்குவரத்து அதிகாரி மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்துள்ளதாக கருதி, அப்பணம் ரூ.68,960/-ஐ கைப்பற்றப்பட்டது. மேலும், அவரது பேக்கினை சோதனை செய்தபோது, அதில் மருதவானன், பீர்சன் ஜான் ஹென்றி, தங்கராஜ், ஏஸ்.இராஜன், மீராபானு, ஸ்ரீதர், இந்திராணி, ஞானசேகர் மற்றும் ரவி ஆகியோர்களின் ஆர்.சி புத்தகங்களும், மேலும், எஸ்.இராஜன், ஏகாம்பரம், பரந்தாமன், தங்கராஜ், லாசர், கோபிநாத் ஆகியோர்களின் லைசென்ஸ் ஆகியனவும் வைத்திருந்தார். அதோடு ஒரு கவரில் அவருக்கு தேவையான அதாவது

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

பைனான்ஸ்காரர்கள் பயன்படுத்தும், ரப்பர் ஸ்டாம்புகளை வைத்திருந்தார். மேலும் அவர் செங்கற்பட்டில் KVS Consultation என்ற வாகன கன்சல்டன்ஸியை, கடந்த 10 ஆண்டுகளாக நடத்தி வருவதாகம், பைனான்ஸ் கம்பெனிகளின் வாகன பதிவுகள், ரத்துகள் மற்றும் பிட்னஸ்கள் சம்மந்தமான வேலைகளை செய்து வருவதாக தெரிவித்தார். அவர் தன் அலுவல் சம்மந்தமாக வந்திருப்பதாக தெரிவித்தார். மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு வெளியில் கேட்டின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN 37 CP 5556 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற Muruthi Ertica வாகனத்தை குறித்து கேட்டபோது மேற்படி வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராஜ் என்பவருக்கு சொந்தமானது என தெரியவந்தது. அவரை அழைத்து மேற்படி வாகனத்தை அவர் முன்னிலையில் சோதனை செய்தபோது அதில் வாகனத்தின் பின்பக்க சீட்டில் ஒரு சிரிய துணி பையில் 500x1, 200x2, 100x11, 50x5 ஆக மொத்தம் ரூ.2250/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால், அப்பணம் கையூட்டு பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனை செய்து கொண்டிருக்கும்போது அலுவலகத்திற்கு உள்ளே வந்தவரை விசாரிக்க அவர் தான் இவ்வலுவலகத்தில் கணக்கராக பணிபுரிவதாக தெரிவித்தார், இன்று Advance Number fees (Fancy Number fees) நான்கு வாகனங்களுக்காக வசூலிக்கப்பட்ட ரொக்கம் ரூ.74,000/- செங்கற்பட்டில் உள்ள SBI வங்கிக்கு சென்று செலுத்திவிட்டு ரசீது எண்.46 பெற்று வருவதாக தெரிவித்து அதனை காட்டினார். அதன் நகல் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.140/- வைத்திருந்தார். மேற்படி பணத்தை பற்றி கேட்க தான் இன்று கொண்டுவந்து அலுவலக பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூ.460/- ல், செலவு செய்தது போக மீதி ரூ.140/- மட்டும் தன்னிடம் உள்ளதாக தெரிவித்தார்.

<u>வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம் இருந்த தொகைகளின் விவரம்.</u>

| வ.எண். | வெளிநபர்களின் பெயர்கள் | இருப்பின் மதிப்பு |
|---|---|---|
| 1. | திரு.C.நடராஜன், வட்டார போக்குவரத்து அலுவலர் | - |
| 2. | திரு.B.S. கஜேபதி PA to RTO | - |
| 3 | திரு.K.செல்வராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் | ரூ.370/- |

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

| | | |
|---|---|---|
| 4 | திரு..சரணவன், மோட்டார் வாகன ஆய்வாளர் | ரூ.600/- |
| 5 | திரு.N.பிரபு, உதவியாளர் | ரூ.460/- |
| 6 | திரு.பிரேம்குமார் உதவியாளர் | ரூ.380/- |
| 7 | திரு.சிவக்குமார், உதவியாளர் | - |
| 8 | திரு.கலைமணி இளநிலை உதவியாளர் | - |
| 9 | திரு.தங்கராஜ், இளநிலை உதவியாளர் | ரூ.860/- |
| 10 | திரு.ஜெகநாதன் பதிவறை எழுத்தர் | ரூ.500/- |
| 11 | திரு.ராமன், இளநிலை உதவியாளர் | ரூ.800/- |
| 12 | திரு.சாலமன், ஓட்டுநர் | ரூ.200/- |
| 13 | திரு.சீனுவாசன், அலுவலக உதவியாளர் | ரூ.200/- |
| 14 | திரு.பார்த்தசாரதி | - |
| 15 | திரு.சுரேஷ் உதவியாளர் | ரூ.290/- |
| 16 | திருமதி. மனோன்மணி, அலுவலக உதவியாளர் | ரூ.550/- |

மேற்குறிப்பிட்ட அலுவலர்களின் தொகைகளை சரிபார்த்து அலுவலக பணியாளர் பணம் கையிருப்பு பதிவேடு மூலம் 24.10.2019-ன்படி பணம் சரிபார்க்க சரியாக இருந்ததால், அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. (1) அக்டோபர்-24.10.2019 வருகைப்பதிவேடு நகல் மற்றும் 23.10.19, 24.10.19 வருகை பதிவேட்டின் சுருக்கத்தின் நகல், (2) பணியாளர் பண கையிருப்பு பதிவேடு நாள் 24.10.2019-ன் நகல் 3) படை வீரர் கொடி நாள் நிதி இரசீது எண் 42183-ன் நகல், 4) Certificate of fitness for vechicle Registration Nos TN 19 AB 3351, TN 19 F 1435, TN 19 R 8663, TN 19 J 4981, 5) LLR License No TN 19/0007612/2019, LLR License No TN 19/0008066/2019, LLR License No TN 19/0008060/2019,6) Tax Invoice No. PSS/19-20/1973 & enforcement-ன் வருகைப்பதிவேட்டினை நகலெடுத்து, அனைத்திலும் ஆர்.டி.ஓ மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களிடமும் கையொப்பம் பெறப்பட்டு, அவற்றை கைப்பற்றப்பட்டு, அவற்றின் அனைத்து உண்மை ஆவணங்களை ஆர்.டி.ஓ அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆகியன நகல் எடுக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. மேலும், கேட்டின் உள்ளே நுழையும்போது, பின்பக்கமிருந்து ஒருவர் வெளியே ஓடும்போது, அவர் கையில் இருந்த 14+38 என 52

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

டிரைவிங் லைசென்ஸ்கள் மற்றும் ஒரு கவரையும் வீசி எறிந்துவிட்டு ஓடிவிட்டார். ஓடிய நபரைப்பற்றி விசாரிக்க செங்கற்பட்டு ராஜா டிரைவிங் பள்ளியைச்சேர்ந்த நபர் என்று தெரிய வந்தது. அந்த கவரை பிரித்து பார்க்க ரூ.1,870/- பணம் இருந்தது. அந்த பணமும் உரிமை கோராத பணம், அதனை இவ்வலுவலக அதிகாரிகளுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவரப்பட்ட பணம் என்பதாக முடிவு செய்து அதனை கைப்பற்றப்பட்டது. டிரைவிங் லைசன்ஸ்களை அலுவலக அதிகாரி மூலம் விசாரிக்க மேற்குறிப்பிட்ட டிரைவிங் லைசென்ஸ்கள் ராஜா டிரைவிங் ஸ்கூலைச்சேர்ந்தவர் என்றும் உறுதி செய்தனர். அந்த டிரைவிங் லைசென்ஸ்களை கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் ரூ.88,380/- (2000x4, 500x131, 200x41, 100x53, 50x19, 20x12 & 10x19)-ஐ மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் ஆகியோர்களுக்கு லஞ்சமாக கொடுத்த பணம் என உறுதியானதால், அப்பணத்தை கைப்பற்றப்பட்டது. மேலும், ஆர்.டி.ஓ திரு.நடராஜன் அவர்களின் அறையில், சுமார் 40,000/-ம் ரூபாய் மதிக்கத்தக்க 43" சாம்சங் எல்.ஈ.டி ஸ்மார்ட் டிவியும், சுமார் 23,000/-ம் மதிப்புள்ள Canon Image Class MF 244DW New Printer-ம், சுமார் ரூ.8,000/- மதிப்புள்ள புதிய பஜாஜ் கூலஸ்ட்-TC-2007 என்ற AIR Cooler-ம், பாத்திமா ஹோம் அப்ளையன்சஸ், செங்கற்பட்டுவில் ரூ.6,900/-த்திற்கு வாங்கப்பட்டுள்ள புதிய பீரோ, Onida 1 ½ Ton AC (சுமார் ரூ.25,000/-) புதிய ஏசியும் உள்ளது. மேலும், ACER-HDMI Touch screen 21" Monitor ஒன்று புதிதாகவும் உள்ளது. அதன் மதிப்பு சுமார் ரூ.20,000/-ம் ஆகும். மேற்குறிப்பிட்ட பொருட்கள் வாங்கிய விவரம் குறித்து அலுவலக பணியாளர்களை விசாரித்தபோது, மேற்கண்ட பொருட்கள் அனைத்தும், தற்போது பணியில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நடராஜன் அவர்கள் பணிக்கு வந்தபிறகு வாங்கியதாக தெரிவித்தார்கள். அதுசம்மந்தமாக ஆர்.டி.ஓ திரு.நடராஜன் அவர்களிடம் கேட்டபோது, தான் இந்த அலுவலகத்தில் புதிதாக கடந்த 24.12.2018-ந்தேதி பணிக்கு வந்தபோதே மேற்குறிப்பிட்ட பொருட்கள் அவரது அறையில் இருந்ததாகவும், மேற்கண்ட பொருட்கள் எதுவும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டதில்லை என்றும் தெரிவித்தார்.

**FIR continuation in Kanchipuram V&AC, Cr.No.9/AC/2019/KM of Column-12.....**

மேற்குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகளும், இன்று 24.10.2019-ந்தேதி மாலை 17.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

(1) ஒம்/-----
திரு..S.தங்கவேல்,
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,
காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள்
(இருப்பு), காஞ்சிபுரம்.

(2) ஒம்/-----
திரு.T.சிவபாதசேகரன்,
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்புப்பிரிவு,
காஞ்சிபுரம்..,

(3) ஒம்/-----
திருமதி.G.S.தமிழரசி,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்.

(4) ஒம்/-----
திரு.கோ.அண்ணாதுரை,
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு & கண்காணிப்பு பிரிவு,
காஞ்சிபுரம்.

(5) ஒம்/-----
திரு.C.நடராஜன், ஆ/வ-54,
த/பெ. M.செல்லப்பா,
வட்டார போக்குவரத்து அலுவலர்,
வட்டார போக்குவரத்து அலுவலகம்,
(இருப்பு-பரனூர்) செங்கற்பட்டு,
காஞ்சிபுரம் மாவட்டம்.

(6) ஒம்/-----
திரு.கு.செல்வராஜ், த/பெ. குழந்தைகவுண்டர்,
மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1,
வட்டார போக்குவரத்து அலுவலகம்,
(இருப்பு பரனூர்),
செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.

(7) ஒம்/-----
திரு.எஸ்சரவணன், த/பெ. சங்கரன்,
மோட்டார் வாகன ஆய்வாளர், நிலை-1,
(செயலாக்கம்), வட்டார போக்குவரத்து
அலுவலகம், (இருப்பு பரனூர்),
செங்கற்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம்.

(8) ஒம்/-----
பெ.பிரேம்குமார், உதவியாளர்

(9) ஒம்/-----
நா.பிரபு, கணக்கர்.

(10) ஒம்/-----
நா.தங்கராஜ், இளநிலை உதவியாளர்.

(11) ஒம்/-----
எஸ்.ஜெகந்நாதன், ரிக்கார்டு கிளார்க்

**Sir,** Received this complaint with Proceeding from DSP, V&AC, Kanchipuram and registered a case in Kanchipuram V&AC Cr.No.9/AC/2019/KM u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 as amended 2018 and 102 Cr.P.C on 30.10.2019 at 13.00 hrs. (Sd/- XXX G.S.Tamizharasi, 30.10.2019, Inspector of Police, V&AC, Kanchipuram).

The original FIR, complaint with proceeding of District Inspection Cell Officer are submitted before the Hon'ble CJM cum Special Judge, Chengalpattu along with the seized un-accounted money Rs.88,380/- and other connected documents on 31.10.2019.

30/10/19
[G.S.TAMIZHARASI]
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501